## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பெனியில் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கம்பெனியின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பெனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பெனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பெனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பெனியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கம்பெனியின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை கம்பெனியினால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆவது பந்தியின் பிரகாரம் கம்பனியிடமுள்ள ரூபா 74,370,330 கிரய பெறுமதியான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அவற்றின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தில் மீள் மதிப்பீட்டை மேற்கொண்டு முன்வைக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆவது பந்தியின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பெறுமானத்தேய்வு கணக்கிடும் போது அந்த சொத்துக்கள் தொடர்பாக குறைமீதி பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மேலும் பயன்படுத்திய கிரயம் ரூபா 7,579,020 ஆன இரண்டு வகையான சொத்துக்களின் திறன் பெறுமதி பூச்சியப் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் பொருட்களை மீண்டும் மதிப்பிட்டு உரிய பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 1,992,479 ஆன பெற வேண்டிய வட்டி வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக அந்த பெறுமதியில் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சல் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பணத்தினாலான வட்டி வருமானமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 8,692,784 தொகையில் அட்டுறு அடிப்படையிலான கணக்கிடப்பட்ட தொகை ரூபா 1,992,479 மாத்திரமேயாகும். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமானக் கூற்றின் பிரகாரம் பணிக்கொடைச் செலவு ரூபா 518,880 ஆக காணப்பட்ட போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய இலாபத்தில் பணிக்கொடை செலவாக ரூபா 1,045,074 சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 526,194 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்திலே உரியவற்றை சரி செய்து சமர்ப்பிக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 166,830 ஆன வெளிநாட்டு நாணயமாற்று கைமாற்றல் நட்டம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய நட்டத்திற்கு சீர் செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்திலே உரியவற்றை சரி செய்து சமர்ப்பிக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு முதல் 2018 வரையான காலப்பகுதிக்கு உரிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கொமிஸ் பணம் உள்ளடங்கலாக கிடைக்க வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 7,224,694 அறவிடப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் நிதிக்கூற்றுக்களில் கிடைக்கப்பெற வேண்டிய மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனத்திற் கொண்டு உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவையான ஆவணங்களை முறையாக சமர்ப்பித்து கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய வெளிநாட்டில் தொழிலுக்காக சென்று உயிரிழந்த தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா 7,490,081 ஆன மரண இழப்பீட்டை செலுத்தி விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தாமதத்திற்கு காரணம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் சட்டரீதியான இழப்பீட்டாளர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பதற்கு இன்னமும் முடியாதிருந்தமையாகும். பணியகத்தினால் பெயர் பட்டியல் கிடைத்த உடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | தொழிலாளர் களுக்காக கிடைக்கப் பெற்றுள்ள மரண இழப்பீட்டினை நீண்ட காலமாக செலுத்தி விடுவிக்காததன் காரணத்தை தேடிப்பார்த்து அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாத வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச் சட்டத்தின் 133 ஆவது பிரிவு | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கம்பனியின் முழுமையான பங்கு உரிமையாண்மை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் காணப்படுவதுடன் மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் பணியகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் வருடாந்த பொதுக் கூட்டம் இடம் பெற்றிருக்கவில்லை. | கம்பனி அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்று நிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் 2020 யூலை 15 ஆந் திகதி வரை 116 நாட்கள் தாமதிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றின் காரணமாக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுகன் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. | நிதிக் கூற்றுக்கள் உரிய தினத்திற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கம்பனிக்குரிய ரூபா 83,714,143 கிரயமுள்ள ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப் பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 6,802,673 ஆன நட்டமொன்று ஏற்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் நட்டம் ரூபா 3,015,784 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 3,786,889 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சேவை வழங்கல் வருமானம் ரூபா 2,687,358 மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,846,187 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முன்னேற்றப் பகுப்பாய்வு

கம்பனியின் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 45.7 ஐ நிலையான வைப்பு முதலீட்டின் மூலம் உழைக்கப்பட்ட வட்டியாவதுடன் வியாபார நடவடிக்கைகளில் உழைக்கப்பட ்ட வருமானம் முன்னைய ஆண்டிற்கு இணையாக ரூபா 2,687,358 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் மொத்த வருமானமான ரூபா 18,340,074 வில் நூற்றுக்கு 80.87 அதாவது ரூபா 14,832,188 ஐ ஊழியர் கிரயத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 09 தொழிலாளர்களினால் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் தொலைந்து போயிருந்தது. இது தொடர்பாக பொலிசுக்கு மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு துரிதமாக அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இந்த வெளிநாட்டு கடவுச் சீட்டு தொலைந்தது தொடர்பாக பொறுப்புவாய்ந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மீண்டும் விண்ணப்பிக்கப்பட்ட ஒரு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக ரூபா 11,500 ஆன தண்டப்பணத்தினை உள்ளடங்கலாக ரூபா 15,000 ஆன விளைவற்ற செலவொன்றை ஏற்றிருந்தது. அவ்வாறே தொலைந்து போன எஞ்சிய | உயர்மட்ட முகாமைத்துவத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வாய்மூல அறிவுரையின் பிரகாரம் பொலிசில் முறைப்பாடொன்றை மேற்கொள்ளாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டம் மற்றும் விசாரணை பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒரு கடவுச்சீட்டு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட மற்றும் அவர்களினால் மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு முன்வைக்கப்படாத 1035 வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களின் பட்டியலொன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக | கடவுச்சீட்டுக்கள் தவறான பாவனைக்கு உட்படுவதை தவிர்ப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் கவனக்குறைவாக நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடவுச்சீட்டுக்கள் தொடர்பாக தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கம்பனிக்கு 05 நாடுகளில் இரண்டு வருடங்கள் வரையான செல்லுபடியான 14 வேலைவாய்ப்பு கட்டளைகளின் கீழ் 1492 வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், கணக்காய்வு தினமான 2021 மார்ச் 30 ஆந் திகதியிலும் 20 தொழிலாளர்கள் மாத்திரமே வெளிநாட்டிற்கு சென்றிருந்தனர். ஜப்பான் அரசின் தொழில்சார் பயிற்சி துறைகளுக்கு உரிய 04 வேலைவாய்ப்பு கட்டளைகளின் கீழ் 481 வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அதில் 15 தொழிலாளர்கள் மாத்திரம் தொழிலுக்காக அனுப்பப்பட்டிருந்தனர். அத்தோடு கம்பனியினால் தொடர் நடவடிக்கைகளுக்கான உபாய முறை திட்ட மொன்றினால் முகாமைத்துவும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அனைத்து பிரிவுகளுக்காகவும் இலங்கை தொழிலாளர்களை விநியோகித்தல் மற்றும் வேலைவாய்ப்பு முகவராக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக அரச அனுசரணையுடனான மற்றும் அரச பாதுகாப்புடனான ஒரே வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமான இந்த கம்பனியின் செயலாற்றல் சென்ற வருடங்களிலும் மீளாய்வாண்டிலும் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | சென்ற காலப்பகுதியில் இடம்பெற்ற தொற்று நிலைமையின் காரணமாக வேலைவாய்ப்பு கட்டளைகளுக்காக தொழிலாளர்கள் வெளிநாட்டிற்கு செல்லுதல் குறைந்த அளவில் காணப்பட்டது. அத்தோடு வெளிநாடுகளில் உப முகவர்களின் ஊடாக கொமிஸ் பணம் செலுத்தி வேலைவாய்ப்பு கட்டளைகள் பெற்றுக் கொள்ளும் வல்லமை எங்கள் நிறுவனத்திடம் இல்லை. 2017 ஆம் ஆண்டின் பின்னர் தொழில்வாய்ப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவன உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயணங்களில் பங்கு கொள்ளவில்லை. | அரச அனுசரணையுடனான இந்த தொழில் சந்தர்ப்பங்களை பிரயோசனப்படுத்தி கம்பனி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் தனியார் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இன்சிலெப் மருத்துவ மத்திய நிலையத்திற்கு ரூபா 3,476,298 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் நிதிப் பிரமாணம் 751,753 மற்றும் 756 இன் பிரகாரம் முறையே அந்த பொருட்களை கையளித்தல், பதிவிற்குட்படுத்தல் மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை 2016 ஆம் ஆண்டில் இருந்து அந்த பொருட்கள் கம்பனியின் பாவனைக்கு இல்லாமல் வைக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் அந்த பொருட்கள் மீண்டும் கையளிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது பெறுமதி குறிப்பிடப்படாத அலுவலக உபகரணங்கள் உருப்படி 03 இன் 48 அலகுகள் மற்றும் ரூபா 415,675 ஆன 2 பொருள் அலகுகள் பற்றாக்குறையாக காணப்பட்டது. அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லையென்பதுடன் மீண்டும் பொறுப்பேற்ற பொருட்களை முறையாக பதிவுகளுக்குட்படுத்தி அலுவலக பாவனைக்காக பயன்படுத்துவதற்கு அல்லது உடைந்த பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது பொருட் பதிவு புத்தகத்தில் பொருட்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கை காரணமாக 2019/2020 பொருள் மெய்மையாய்வு இடம்பெறவில்லை. இந்த பொருட்கள் கம்பனியின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உடைந்து பழுதடைந்த பொருட்கள் காணப்பட்டதன் காரணமாக பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | இந்த பொருட்களை பயனுறுதியுடன் பிரயோசனத்திற்கு எடுப்பதற்கு மற்றும் முறையற்ற பாவனையை தடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப் பட்ட காலத்திற்குள் ஈட்டப்பட்ட வருமானத்தில் ரூபா 107,043,120 வைத்திய சான்றிதழ் விநியோகிப்பதற்காக தனியார் | வைத்திய மத்திய நிலையத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | இந்த வைத்திய மத்திய நிலையத்தை ஆரம்பித்தல் மற்றும் பேணிச் செல்லுதல் கம்பனிக்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திற்கும் கட்டிட வாடகை, அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய பராமரிப்புச் செலவுகள் மற்றும் கம்பனியின் பெயரை பயன்படுத்தலுடன் பணிகளின் ஊடாக மத்திய நிலையத்திற்கு தொழிலாளர்களை ஈடுபடுத்தல் உட்பட நடவடிக்கைகளுக்காக வருமானத்தில் நூற்றுக்கு 30 ஆன ரூபா 32,112,936 மாத்திரம் கம்பனிக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. அத்தோடு போலி வைத்திய சான்றிதழ் விநியோகித்தல் காரணமாக அந்த வைத்திய மத்திய நிலையத்தை மூடுவதற்கு நேர்ந்திருந்தது. | | நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் முறையற்றதாக இடம்பெற்றிருத்தல் முகாமைத்துவத்தின் செயற்றிறனின்மை என்பதோடு கவனக் குறைபாடு என்பதனால் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | உரிய காலத்திற்குள் மேற் கூறப்பட்ட தனியார் நிறுவனம் வாடகை கட்டிடத்தில் இருந்து வெளியேறாததன் காரணமாக வழக்கிற்கு தோற்றுவதற்கும், கட்டிடத்திற்காக செலுத்தப்படுகின்ற ரூபா 600,000 ஆன முற்பணத் தொகையை இழக்கும் தருணமொன்றிற்கு கம்பனிக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்துள்ளது. | 2017 ஒக்டோபர் இந்த பிரச்சினை தொடர்பாக நீதிபதி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு வழக்குகளுக்காக தேவையான சட்ட உதவிகளை நீதிபதி திணைக்களத்தினால் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | கம்பனிக்கு நட்டம் ஏற்படாத வகையில் வழக்கு நடவடிக்கைகளை நிறைவு செய்து கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 30 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் 19 பேர் மாத்திரம் சேவையில் இணைக்கப்பட்டிருந்ததுடன் பொது முகாமையாளர், நிதி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள) ஆகிய 03 பதவிகளுக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிரந்தர சேவையில் உள்ள உத்தியோகத்தர்களை நீண்ட காலத்திலிருந்து கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது. அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சாரதியொருவர் சேவையில் இணைக்கப்பட்டிருந்தது. | உரிய பதவிகளுக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்கு நிறுவனத்தின் நிதி நிலைமை சக்தியற்று காணப்படுதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழான நிர்வகிக்கப்படுகின்ற நீர்வனமொன்றாகிய நிறுவனத்திற்கு பணியகத்திலிருந்து அதற்காக தகைமையும் அனுபவமும் உள்ள அதிகாரிகளை அதன் உயர் முகாமைத்துவத்தின் ஊடாக நியமிக்கப்பட்டிருத்தல் இந்த நிலைக்கு காரணமாகும். 2019 ஆம் ஆண்டின் நிறுவனத்தின் பதவியணியினரை ஆட்சேர்க்கும் முறைமை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் சாரதி ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | கம்பனியின் நோக்கம் மற்றும் இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கு போதுமான அளவு பதவியணியினரை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 அரச தொழில் முயற்சி சுற்று நிருபத்தில் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் 2020 யூலை 15 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்குள் நிலவிய தொற்று நிலைமையின் அடிப்படையில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை குறித்த தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாது போனது. | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறித்த தினத்திற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |